செய்தி வெளியீடு எண்: 546 நாள்: 12.03.2024

# செய்தி வெளியீடு

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து ரூ. 64.55 லட்சத்திற்கான காசோலையினை விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு வழங்கினார்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2024–ம் ஆண்டு ஸ்பெயினில் நடைபெறவுள்ள உலக பல்கலைக்கழக கைப்பந்து போட்டியில் கலந்து கொள்ள உள்ள நான்கு விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு தலா ரூ. 3.09 லட்சத்திற்கான காசோலையினையும் ஆசிய தகுதிச் போட்டியில் பங்கேற்கவுள்ள எ.லின்சியாவிற்கு ரூ. 2.20 லட்சத்திற்கான காசோலையினையும் வழங்கினார்.

மேலும் பல்வேறு பன்னாட்டு விளையாட்டு போட்டிகளில் பங்கேற்கவுள்ள 7 பாரா விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு பாரா விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காக ரூ. 36.69 லட்சத்திற்கான காசோலையினையும் மற்றும் பாரா–ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கவுள்ள சதாம் ஹுசைனிற்கு ரூ. 2.20 லட்சத்திற்கான காசோலையினையும் வழங்கினார்.

இரண்டு விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காக தலா ரூ. 70,000 மதிப்பிலான காசோலையினையும் பன்னாட்டு விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க 2 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ. 1.70 லட்சத்திற்கான காசோலை என மொத்தம் 17 விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு ரூ. 56.55 லட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்.

மேலும் அரசு ஆரம்பப் பள்ளிகளில் 3 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும் ஓடி விளையாடு உடற்கல்வி திட்டத்திற்கு உதவித் தொகையாக ரூ. 8 லட்சத்திற்கான காசோலையினை ஓடி விளையாடு பல்நோக்கு பயிற்சி மைய நிர்வாகத்திடம் "TN Champions Foundation" அறக்கட்டளை நிதியிலிருந்து மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in